## வெலிகம பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 17 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 அக்டோபர் 24 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கைவிடப்பட்ட இரண்டு வேலைகள் தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 3.527,930 ஆன கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக ஆண்டின் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் சமமான பெறுமானத்தில் அதிகரித்து காட்டப்பட்டன.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 29,393,597 ஆன 22 காணிகளின் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 12 காணிகளின் பெறுமதிகள் மதிப்பீட்டு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் மாகாண சபை ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டி இருந்த ரூபா 2,542,200 ஆன பங்களிப்புப் பணம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ‘‘வங்கி மீதி’’ மற்றும் ‘‘மேலதிக பற்று மீதி’’ ஒன்றிக்கொன்று பதிலீட்டுக் கிடைத்த தேறிய மீதி காட்டப்பட்டதனால் ரூபா 18,895 ஆன மேலதிக பற்று கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

ரூபா 65,791 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதியை பரிசீலித்து பொருத்தமான செம்மையாக்கல் செய்து கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் திரண்ட நிதியக் கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் தொகை ரூபா 129,541,780 ஆனதுடன், அதற்கு 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 20,341,640 ஆன மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன. இந்த மீதிக்கி உள்ளடங்கப்பட்ட ரூபா 2,422,380

ஆன மூலதன கடன்படுனர் மீதிகள் தொடர்பாக எவ்விதமான விபரமொன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் தொகை ரூபா 35,292,980 ஆனதுடன், அதற்கு 3 வருட காலத்தை விஞ்சிய தொகை ரூபா 4,512,187 ஆன மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன. 2012 மற்றும் அதற்கு முன்பு இருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 2,921,307 ஆன மீதிகள் தொடர்பாக விபரமொன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கூட்டுமொத்தம் ரூபா 42,311,371 ஆன காணியும் கட்டிடங்களுக்கான வருடாந்த பண்டகக் கனிப்பீட்டு அறிக்கை மற்றும் காணியும் கட்டிடங்களுக்கான பதிவேடு, ரூபா 83,974,765 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பான வருடாந்த பண்டகக் கணிப்பீடு அறிக்கை, நிலையான சொத்து பதிவேடு மற்றும் பட்டோலைகள், ரூபா 2,422,380 ஆன வேலை கடன்பட்டோர் மற்றும் ரூபா 3,413,433 ஆன கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பான பட்டோலையும் மீதிகள் உறுதிப்படுத்தலும், ரூபா 2,878,575 ஆன சேகரிப்பு பணம் கிடைத்ததன் தொடர்பான விபரமான பட்டோலையும், போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மை |
|---|---|
| **(அ)** 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>(i) விதி 185 | சபையின் நடைமுறை கணக்குகளில் மிகையாகவுள்ள பணத்தை மதலீடு செய்து சபைக்கு வருமானம் ஈட்டிக்கொள்ள செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ** (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவு, மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 31,513,647 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 30,945,594 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 568,053 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் முன்னைய மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 65 சதவீதம் ஆன மொத்த மீண்டுவரும் செலவினம் நிலவியததனால் சபையின் வருமானத்திற் ஒப்பாக செலவு உயர் தரத்தை பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், வருமான உதவி மற்றும் சுய சம்பாதிப்பு வருமானம் போன்ற மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 90,263,707 | 34,224,388 | 56,039,319 | 58,750,060 | (2,710,741) |
| 2014 | 80,850,831 | 18,800,673 | 62,050,158 | 49,905,237 | 12,144,921 |
| 2013 | 61,832,190 | 12,950,896 | 48,881,294 | 41,780,717 | 7,100,577 |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(i) முன்னைய இரண்டு ஆண்டுகளின் போன்று மீளாய்வாண்டில் வருமான உதவிகளில் அதிகரிப்பு காட்டப்பட்ட போதிலும், முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக 2015 ஆண்டின் சுய சம்பாதிப்பு வருமானங்களில் ரூபா 6,010,839 ஆன குறைவு காணப்பட்டன.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சி மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவு அதிகரித்திருந்தது.

(iv) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(v) மேல் இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் சுய சம்பாதிப்பு வருமானத்தை உயர்துவதற்கு முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியும், மீண்டுவரும் செலவினத்தை குறைத்துக் கொள்வதற்கு செயற்பட வேண்டியும், உள்ளது என கணக்காய்வின் கருத்தாகும்.

## 2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு விகிதம் சாதாரன நிலையில் இருந்ததுடன் கடன்படுனர் மீதியினுள் 03 வருடத்தையும் விஞ்சிய அறவிடப்படாது இருந்த ரூபா 20,341,640 ஆன மீதிகள் உள்ளடங்கிருந்தமையால் அவ் விகிதத்தில் குறிப்பிடப்படும் பிரகாரம் திரவதன்மை நிலைமையொன்று நிலவவில்லை.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை மீதிகள் மற்றும் பற்றுச்சீட்டிடலோடு அறவிடப்படவேண்டிய மொத்த வீத வரி தொகை ரூபா 1,239,853 ஆனது. நிலுவை மீதிகளின் 22 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 33 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்துடன், நிலுவை மீதிகள் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை மீதிகள் மற்றும் பற்றுச்சீட்டிடலோடு அறவிடப்படவேண்டிய மொத்த ஏக்கர் வரி பணம் ரூபா 122,643 ஆனது. நிலுவை மீதிகளின் 0.11 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 04 சதவீதம் அளவான கீழ் தரத்தில் அறவிடல் நிலவிய போதிலும் நிலுவை ஏக்கர் வரி அறவிடல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை மீதிகள் மற்றும் பற்றுச்சீட்டிடலோடு அறவிடப்படவேண்டிய பணம் ரூபா 3,362,537 ஆனது. நிலுவை மீதிகளின் 36 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 79 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை மீதிகள் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159(1)(ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை முத்திரைக் கட்டணத்தின் ரூபா 16,176,883 மற்றும் நிலுவை நீதி மன்றத் தண்டப் பணத்தின் ரூபா 783,958 ஆன பணம் ஆண்டு இறுதிலும் கிடைத்திருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணமாக எவ்வித பணமும் கிடைத்திருக்கவில்லை.

### 2.4.5 ஏணைய வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட வியாபாரங்லின் முன்னைய ஆண்டு வருமானத்தின் 1 சதவீத வரி அறவிடப்படாமல் அதற்கு இணங்காது வரி அறவிட வேண்டிய 6 ஓட்டல்களிலிருந்து ஆண்டிற்கு ரூபா 3000 வீதப்படி வரி அறவிடப்பட்டிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

ஆண்டினுள் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 19 வேலை முன்மொழிவுகள் ஆண்டினுள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை மின்சார சபையின் அங்கீகார வீதி விளக்கு எண்ணிக்கையை விஞ்சி 860 விளக்குகள் பொருத்தியமை காரணமாக மீள் நிரப்புவதற்காக கேட்கப்பட்ட பணத்தில் ரூபா 219,814 மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமானம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்காத 05 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,988,666 ஆனது.

## 3.3 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** கொக்மாடுவ சுடர்சனாராம விஹாரை அருகில் ரனவிரு கமகே பாதை நிர்மானித்தல்

2014 ஆண்டு கிராம பாலம்/நுலைவு பாதை செயற்திட்டடத்தின் கீழ் நடைமுறையாகிய இவ்வேலைக்கு ரூபா 352,972 தொகை 2015 ஏப்ரல் 10 ஆம் திகதி கொடுப்பனவு செய்தன் பின்னர் ஒப்பந்த காரரினால் வேலை கைவிடப்பட்டிருந்தது. சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு மற்றும் ஒப்பந்தகாரர் வேலையை புரக்கனித்தமை தொடர்பாக 2016 மார்ச் 31 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை வளாகத்தில் கரப்பந்து விளையாட்டு அரங்கொன்று நிர்மானித்தல்

தேசிய இளைஞர் சேவை சபை ஒதுக்கத்தின் கீழ் பகல் மற்றும் இரவு நேரங்களில் விளையாட முடியுமான கரப்பந்தாட்ட விளையாட்டு அரங்கொன்றை சபை வளாகத்தில் நிர்மானிப்பதற்காக ரூபா 1,049,814 செலவு செய்ததன் பின்னர் கருத்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

## 3.4 அதிகாரமின்றின கொடுக்கல் வாங்கல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை நிதியத்தை உபயோகிக்க முடியாத விடயமாகிய குறைவருமானம் பெறுபவர்களுக்கு வீடு நிர்மானிப்பதற்கான கருத்திட்டம் ஒன்றுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,000,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 08 செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 82,040,406 ஆன சேமிப்பும், ஓர் விடயத்தின் மதிப்பிடப்பட்ட எல்லை விஞ்சிய ரூபா 14,156,288 ஆன செலவும், 05 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 46,311,691 ஆனமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலகருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 435,792 செலுத்தப்பட்டிருந்தன.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை**

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

2014 ஆகஸ்ட் 21 திகதி நடந்த சபையின் மாதாந்த கூட்டத்தில் ஏலத்தில் விற்பதற்கு தீர்மானிக்கப்பட்ட 02 இயந்திரங்களையும் 03 வண்டிகளையும் 2015 திசெம்பர் 31 திகதி வரையிலும் ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபை வளவில் துரப்பிடித்துக்கொண்டிருந்தன.

(ஆ) சொத்துக்கள் கணிப்பீடு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) ஒழுங்கு 218 பிரகாரம் 2007 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி மற்றும் கட்டிட கணிப்பீட்டின் சிபாரிசுகளை 2015 ஆண்டு இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையினுள் கனத்தகொட இடுகாட்டினை சுவர்ன பூமி, ஜய பூம் மற்றும் ரன் பிம எனும் வேலை திட்டத்தின் கீழ் துண்டாக்கப்பட்டு உரித்துரிதி பெற்றுக்கொடுக்கப்பட்ட போதும் அது தொடர்பாக சபை விடயம் அறிந்திரிக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) நிதி கட்டுப்பாடு

(இ) பாதீட்டு கட்டுப்பாடு.

(ஈ) வருமான நிருவாகம்.

(உ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்.